
தினமணி

**கன்னியாகுமரி அருகே புயல்**

First Published : 31 Oct 2011 03:06:08 AM IST

Last Updated : 31 Oct 2011 03:46:59 AM IST



சென்னை, அக். 30: வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வு நிலை கன்னியாகுமரி அருகே நகர்ந்திருப்பதால், தமிழகத்தின் தென் மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்துக்கு கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

கடந்த ஒரு வாரமாகப் பெய்து வரும் மழைக்கு தமிழகம் முழுவதும் இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

மழை தொடரும்: இலங்கையில் இருந்து ஆந்திர மாநிலத்தை ஒட்டியுள்ள மத்திய மேற்கு வங்கக்கடலில் கடந்த 2 நாள்களாக நிலை கொண்டிருந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை, ஞாயிற்றுக்கிழமை கன்னியாகுமரி நோக்கி நகர்ந்து வந்துள்ளது. இதன் காரணமாக கன்னியாகுமரி, திருநெல்வேலி உள்பட தென் தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்துக்கு கன மழை நீடிக்கும். உள் தமிழகம், கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுவையில் பெரும்பாலான பகுதிகளில் பலத்த மழை பெய்யக்கூடும்.

ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்யும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். பகல் மற்றும் இரவு நேரங்களில் அனைத்துப் பகுதிகளிலும் தொடர் மழையோ இடியுடன் கூடிய கனமழையோ பெய்ய வாய்ப்பு உள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன் தெரிவித்தார்.

திருநெல்வேலி மாவட்டத்தில்... திருநெல்வேலி மாவட்டத்தில் சனிக்கிழமை இரவு முதல் பெய்துவரும் பலத்த மழையால், பல ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்கள் அறுவடை செய்ய முடியாமல் நீரில் மூழ்கியுள்ளன.

மேற்குத் தொடர்ச்சி மலையில் ஆறுகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்துவரும் பலத்த மழையால் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை 100 அடியைத் தாண்டியது. பாபநாசம், மணிமுத்தாறு, கடனாநதி, ராமநதி அணைகளின் நீர் மட்டமும் அதிகரித்து வருகிறது.

கடலில் மூழ்கிய படகு: ராமேஸ்வரம் கடல் பகுதியில் சனிக்கிழமை இரவு ஏற்பட்ட சூறாவளிக் காற்றில் சிக்கி விசைப்படகு மூழ்கியது.

அந்தப் படகில் இருந்த மீனவர்கள் அலெக்ஸ், தால்சன், ரீகன், மெத்தன் ஆகிய 4 பேரும் மிதவை உதவியுடன் நடுக்கடலில் நீந்திக் கொண்டிருந்தனர். அப்போது அவ் வழியாக மீன் பிடித்து வந்த மற்றொரு விசைப்படகு மீனவர்கள், உயிருக்குப் போராடிய 4 மீனவர்களையும் மீட்டு, ராமேஸ்வரம் கரைக்கு ஞாயிற்றுக்கிழமை அழைத்து வந்தனர். கடலில் மூழ்கிய விசைப்படகின் மதிப்பு ரூ. 5 லட்சம் இருக்கும் என மீனவர்கள் தெரிவித்தனர்.

மலை ரயில் பாதையில்... குன்னூரில் கடந்த 5 நாட்களாக பலத்த மழை பெய்து வருவதால் ஆங்காங்கே மண் சரிவுகளும், மரங்கள் வேரோடு விழும் சம்பவங்களும் தொடர்கின்றன. குன்னூரில் இருந்து உதகைக்கு ஞாயிற்றுக்கிழமை காலையில் புறப்பட்ட மலை ரயில், வெலிங்டன் அருவங்காடு இடையே சென்றபோது, மூன்று இடங்களில் மண் சரிவு ஏற்பட்டுள்ளதாக அதன் ஓட்டுநருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து ரயில் அங்கேயே நிறுத்தப்பட்டது.

ரயில்வே ஊழியர்கள் 10-க்கும் மேற்பட்டவர்கள், ரயில் பாதையில் விழுந்து கிடந்த மண் குவியலை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். பணிகள் முடிவடைந்த பின்னர், ஒரு மணி நேரம் தாமதமாக உதகைக்கு மலை ரயில் புறப்பட்டுச் சென்றது.

மழை அளவு: ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி அதற்கு முந்தைய 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக மதுரை மாவட்டம் உசிலம்பட்டி, திருச்சி விமான நிலையம் ஆகிய இடங்களில் 80 மில்லி மீட்டர் மழை பதிவானது.

பிற இடங்களில் பதிவான மழையின் அளவு (மில்லி மீட்டரில்): பரங்கிப்பேட்டை, அம்பாசமுத்திரம், மணியாச்சி, பெரியகுளம், தாராபுரம் 70, பூந்தமல்லி, மணிமுத்தாறு, கோத்தகிரி, சோழவந்தான், மேட்டுப்பாளையம், நத்தம் 60, மாமல்லபுரம், உத்திரமேரூர், தாமரைப்பாக்கம், கடலூர், சீர்காழி, பாளையங்கோட்டை, நாங்குநேரி, ராதாபுரம், நாகர்கோவில், கன்னியாகுமரி, கோவை, திருப்பத்தூர் (சிவகங்கை மாவட்டம்), நிலக்கோட்டை 50, கல்பாக்கம், மீனம்பாக்கம், அடையாறு, பொன்னேரி, திருவாரூர், கொள்ளிடம் 40, சென்னை, காஞ்சிபுரம், மதுராந்தகம், திருவள்ளூர், சோழவரம், செம்பரம்பாக்கம், பூண்டி, செங்குன்றம், செஞ்சி, திருவையாறு,

கொடைவாசல், மன்னார்குடி, நீடாமங்கலம், திருத்துறைப்பூண்டி, தூத்துக்குடி, திருப்பூர், திருச்சி, மேலூர், கொடைக்கானல் 30 என பரவலாக மழை பெய்தது.

**மண் சரிவு**

வடகிழக்குப் பருவ மழை தொடங்கியது முதல் கடந்த ஒரு வாரத்தில் நீலகிரி மாவட்டத்தின் பல பகுதிகள் மற்றும் பழனி மலையில் யானைப் பாதையில் மண் சரிவு ஏற்பட்டது. மேலும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் சாலையோர மரங்கள் வேரோடு சாய்ந்த சம்பவங்கள், வீடுகள் இடிந்து விழுந்த சம்பவங்களும் நடைபெற்றுள்ளன. சென்னை உள்பட தமிழகத்தில் தாழ்வான பகுதிகள் மழை நீரால் சூழப்பட்டுள்ளது. இதனால் மக்களின் அன்றாட வாழ்க்கை மிகவும் பாதித்துள்ளது.

**ரயில்கள் காலதாமதம்**

கன மழை பெய்ததால், தென் மாநிலங்களில் இருந்து சனிக்கிழமை இரவு புறப்பட்டு சென்னை எழும்பூர் வந்த கன்னியாகுமரி, நெல்லை, முத்துநகர், பொதிகை, பாண்டியன், சேது உள்ளிட்ட விரைவு ரயில்கள் சுமார் ஒரு மணி நேரம் வரை காலதாமதமாக வந்தன. ஆறு, ஏரி, கால்வாய் உள்ள பகுதிகளில் அனைத்து விரைவு ரயில்களும் வேகம் குறைவாக, 30 கி.மீ. வேகத்தில் இயக்கப்பட்டன.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 90 அடி**

First Published : 31 Oct 2011 02:22:54 AM IST

மேட்டூர், அக் 30: மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை 90 அடியைத் தாண்டியது. அணைக்கு விநாடிக்கு 13,206 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

காவிரி டெல்டா மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், மேட்டூர் அணையிலிருந்து பாசனத்துக்குத் திறந்துவிடப்பட்டிருந்த தண்ணீர், கடந்த 26-ம் தேதி முதல் நிறுத்தப்பட்டது. மேட்டூர் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக நீர்வரத்து அதிகரித்துள்ளது.

கடந்த 25-ம் தேதி மாலை 84.75 அடியாக இருந்த நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 90.58 அடியாக உயர்ந்துள்ளது. நீர் இருப்பு 53.31 டி.எம்.சி.யாக உள்ளது. கடந்த 5 நாள்களில் அணையின் நீர்மட்டம் 5.83 அடி உயர்ந்துள்ளது. தொடர்ந்து மழை பெய்தால், இன்னும் 12 தினங்களில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நடப்பு நீர்ப்பாசன ஆண்டில் கர்நாடகத்திலிருந்து மேட்டூர் அணைக்கு 166.22 டி.எம்.சி. தண்ணீர் வந்திருக்க வேண்டும். ஆனால், இப்போதுவரை 144.73 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே வந்துள்ளது.

**சிவகங்கை: நெல் பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு**

First Published : 30 Oct 2011 12:53:06 PM IST

சிவகங்கை, அக். 30: சிவகங்கை மாவட்டத்தில் நடப்பு 2011-ம் ஆண்டு நெல் சம்பா பருவத்தில் திருந்திய தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்று வேளாண்மை இணை இயக்குநர் தட்சிணாமூர்த்தி கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

இந்த காப்பீட்டுத் திட்டம் அக்ரிகல்சுரல் இன்சூரன்ஸ் ஆஃப் இந்தியா என்ற மத்திய அரசு நிறுவனத்தால் நடத்தப்படுகிறது. அனைத்து நெல் விவசாயிகளும் காப்பீடு செய்துகொள்ளலாம்.

அடிமட்ட அளவில் பிர்காவுக்கு பதிலாக கிராமம் / கிராமப் பஞ்சாயத்து என்ற அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கிராமங்களும் இத்திட்டத்தின்கீழ் அடங்கும். மழை, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்கள் மற்றும் பூச்சி/நோய் தாக்குதல்களால் ஏற்படும் பயிர் இழப்புக்கும் காப்பீடு செய்யப்படுகிறது.

அனைத்து விவசாயிகளுக்கும் பிரீமியத் தொகையில் 60 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. ஒரு ஹெக்டேருக்கு செலுத்த வேண்டிய பிரீமியத் தொகை ரூ.603. இதற்கான காப்பீட்டுத் தொகை ரூ.11,770.

ஒரு ஹெக்டேர் ரூ.13,460க்கும் காப்பீடு செய்யலாம். ஆனால், இதற்கு பிரீமியத் தொகையில் அரசு மானியம் கிடைக்காது. இதற்கான பிரீமியத் தொகை ரூ.1,723 ஆகும்.

கடன் வசதி பெறும் விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் கட்டாயம் காப்பீடு செய்ய வேண்டும். கடன் வசதி பெறாதவர்கள் அவரவர் விருப்பப்படி காப்பீடு செய்துகொள்ளலாம்.

வங்கிகளில் கடன் பெறாத விவசாயிகள் காப்பீடு செய்ய கடைசி தேதி 15.11.2011. கடன் பெறும் விவசாயிகளுக்கு 30.11.2011 கடைசி தேதியாகும்.

எனவே விவசாயிகள் 10(1) மற்றும் அடங்கல் ஆவணங்களுடன் காப்பீட்டு படிவத்தை பூர்த்தி செய்து தொடக்கக் கூட்டுறவு வங்கி அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் பிரீமியத் தொகையை செலுத்தலாம் என்றார்.

**ஆத்தூர் காமராஜர் சாகர் அணை நிரம்பியது**

First Published : 30 Oct 2011 12:08:24 PM IST

திண்டுக்கல், அக். 29: திண்டுக்கல் நகருக்கு குடிநீர் வழங்கும் ஆத்தூர் காமராஜர் சாகர் அணை நிரம்பி மறுகால் பாய்கிறது.

திண்டுக்கல் நகருக்கு குடிநீர் வழங்குவதற்காக, காமராஜர் முதலமைச்சராக இருந்த போது ஆத்தூரில் கட்டப்பட்டதுதான் காமராஜர் சாகர் அணை. மேற்குத் தொடர்ச்சி மலையில் இயற்கையாகவே மூன்று புறம் அரணாகப் பாறைகள் கொண்ட பகுதியில் இந்த அணை கட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, இப்பகுதியில் நல்ல மழை பெய்தால், அந்த நீர் வீணாகாமல் அப்படியே அணைப் பகுதிக்கு வந்து சேரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே, ஆண்டுக்கு 4 முறை வரை அணை நிரம்பியதும் உண்டு.

இந்நிலையில், கடந்த சில நாள்களாக மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் வடகிழக்குப் பருவமழை பரவலாக பெய்ததால், இந்த ஆண்டு முதல்முறையாக அணை தனது முழு கொள்ளளவான 23 அடி உயரத்தை எட்டியதுடன், தற்போது மறுகால் பாய்ந்து செல்கிறது. எனவே, நகரில் மாதம் இரு முறை குடிநீர் விநியோகம் என்ற நிலையில் மாற்றம் ஏற்பட வழி பிறந்துள்ளது.

அணையில் மறுகால் பாய்ந்து தண்ணீர் செல்வதாகத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து, சனிக்கிழமை திண்டுக்கல் நகர்மன்றத் தலைவர் வி. மருதராஜ், மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி அதிகாரிகள் அணையைப் பார்வையிடச் சென்றனர்.

**பாசனத்துக்காக ஈச்சம்பாடி அணை திறப்பு**

First Published : 30 Oct 2011 11:12:17 AM IS

தருமபுரி, அக்.29: தருமபுரி மாவட்டம் அரூர் வட்டம் ஈச்சம்பாடி அணைகட்டில் இருந்து பாசனத்துக்காக சனிக்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள 6,250 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

அணைகட்டின் மதகுகளை தருமபுரி மாவட்ட ஆட்சியர் ஆர்.லில்லி திறந்து வைத்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியது:

ஈச்சம்பாடி அணைகட்டில் இப்போதுள்ள நீர் அளவு, எதிர்வரும் பருவமழை ஆகியவற்றை கருத்தில் கொண்டு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இடப்புற மற்றும் வலப்புற கால்வாய்களில் ஒவ்வொரு கால்வாயிலும் 2 மண்டலங்களாக பிரித்து முதல் மண்டலத்துக்கு 5 நாள்கள், 2-வது மண்டலத்துக்கு 5 நாள்கள் என முறை வைத்து விநாடிக்கு 70 கன அடி வீதம் அதிகபட்சமாக 120 நாள்கள் வரை தண்ணீர் திறந்து விடப்படும்.

தருமபுரி மாவட்டத்தில் அக்ரஹாரம், ஈச்சம்பாடி, கெட்டுப்பட்டி, சாமண்டஅள்ளி, ஏலவடை, பாளையம், பள்ளிப்பட்டி, காட்டனூர், வெளாம்பட்டி, சிங்கிரிப்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள 3,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊத்தங்கரை வட்டம் பெரியகுட்டகுளம், பச்சனாம்பட்டி, சொரக்காப்பட்டி, வெள்ளாளப்பட்டி, வேலம்பட்டி, மேட்டுத்தாங்கள், கொல்லம்பட்டி, சந்தரப்பட்டி, காட்டுசிங்கிரிப்பட்டி, பெருமாநாய்க்கன்பட்டி, ஊமைகவுண்டம்பட்டி, வேடப்பட்டி, செங்கல்பட்டி, கிட்டம்பட்டி, கோணம்பட்டி, முருக்கந்தாள், அம்மாபேட்டை, வண்ணான்பட்டி, காட்டம்பட்டி, வீரணகுப்பம், கதிரம்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள 3,250 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் அரூர் கோட்டாட்சியர் சி.காமராஜ், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (நீர்வள ஆதாரம்) வெ.ஜெகநாதன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பாபநாசம் அணை நீர்மட்டம் 67 அடி**

First Published : 30 Oct 2011 02:11:24 PM IST

அம்பாசமுத்திரம், அக். 29: மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்து வரும் மழையால் பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் மேலும் உயர்ந்துள்ளது.

சனிக்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணையில் 45 மி.மீ. மழையும், பாபநாசம் கீழ் அணையில் 29 மி.மீ. மழையும், சேர்வலாறு அணையில் 33 மி.மீ. மழையும், மணிமுத்தாறு அணையில் 36.2 மி.மீ. மழையும், அம்பாசமுத்திரத்தில் 26.8 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

பாபநாசம் அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 67 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 3.73 அடி உயர்ந்து 83.73 அடியாகவும் இருந்தது.

**மழை சேதங்களை தவிர்க்க விவசாயத் துறை ஆலோசனை**

First Published : 30 Oct 2011 04:47:55 PM IST



தேனி, அக். 30: தேனி மாவட்டத்தில் பரவலாக பெய்துவரும் கன மழையால் பயிர்களில் சேதம் ஏற்படுவதை தவிர்க்க மாவட்ட விவசாயத் துறை ஆலோசனை வழங்கியுள்ளது. இது குறித்து மாவட்ட விவசாயத் துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர் ஆகிய பகுதிகளில் குறுவை நெல் அறுவடை பருவத்தில் உள்ளது. தற்போது பெய்து வரும் மழையால் நெல் வயலில் தேங்கும் உபரி நீரை வடித்து விட வேண்டும். மழை ஓயந்ததும் அறுவடை பணிகளை விரைவில் தொடங்க வேண்டும். போடி, பெரியகுளம், ஆண்டிபட்டி ஆகிய பகுதிகளில் நடவு செய்யப்பட்டுள்ள சம்பா நெல் பயிர் வளர்ச்சி நிலையில் உள்ளதால், மழை ஓய்ந்ததும் முதல் மேலுரமாக 33 கிலோ யூரியா மற்றும் 14 கிலோ பொட்டாஷ் இட வேண்டும். தொடர் மழையால் ஏற்படும் பாதிப்பை தடுப்பதற்கு டி.ஏ.பி., 2 சதவிகிதம், யூரியா ஒரு சதவிகிதம், பொட்டாஷ் ஒரு சதவிகிதம் கரைசலை இலை வழியாக நெல் பயிர் அதிக தூர்கட்டும் பருவத்திலும், தொடர்ந்து 20-வது நாளிலும் தெளிக்க வேண்டும். மானாவரி சோளம், கரும்பு பயிர்களுக்கு மழை நின்றவுடன் வளர்ச்சி நிலையில் மேலுரமாக ஒரு ஏக்கருக்கு 20 கிலோ யூரியா இட வேண்டும். துவரை, பாசிப்பயறு, உளுந்து, தட்டைப்பயறு ஆகியவற்றில் பூ பூக்கும் தருணத்தில் டி.ஏ.பி., கரைசல் 2 சதவிகிதம் 15 நாள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

கடமலைக்குண்டு, ஆண்டிபட்டி ஆகிய பகுதிகளில் தக்காளி, கத்தரி, மிளகாய், அவரை அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்தப் பயிர்கள் மழையால் பாதிக்காமல் இருப்பதற்கு தோட்டத்தில் தேங்கும் உபரி நீரை வடித்து விட வேண்டும். ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கிராம் மான்கோசெப் மற்றும் ஒரு கிராம் காப்பண்டசிம் கலந்து ஒட்டுப்பசையுடன் தெளிக்க வேண்டும். கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர் ஆகிய பகுதிகளில் வாழையில் காஞ்சாரை நோய் தாக்காமல் இருப்பதற்கு ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு மில்லி பிரபிகோனசால் கலந்து ஒட்டுப்பசையுடன் தெளிக்க வேண்டும். மானாவரி கொட்டை முந்திரிக்கு இந்த பருவத்தில் உரம் இடலாம். ஒரு மரத்திற்கு தலா அரை கிலோ டி.ஏ.பி., மற்றும் பொட்டாஷ், ஒரு கிலோ யூரியா ஆகியவற்றை கலந்து இட வேண்டும்

- இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வடகிழக்குப் பருவ மழை தீவிரம்**

First Published : 30 Oct 2011 04:07:27 AM IST



சென்னைக்கு குடிநீர் வழங்கும் பூண்டி, சோழவரம், செம்பரம்பாக்கம் ஏரிகளும் வேகமாக நிரம்பி வருகின்றன. சென்னையில் சனிக்கிழமை பெய்த கனமழையில் குளமாக மாறிய கோ

சென்னை, அக். 29: தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவ மழை தீவிரம் அடைந்துள்ளது. பருவ மழை தொடங்கியது முதல் இதுவரை வீடுகள் இடிந்தது போன்ற சம்பவங்களால் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

சென்னை, கடலூர் உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் அடுத்த இரண்டு நாள்களுக்கு மழை நீடிக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

வடகிழக்கு பருவ மழை காரணமாக, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் கனமழை பெய்து வருகிறது. சனிக்கிழமை காலை நிலவரப்படி, மாநிலத்தில் அதிகபட்சமாக குன்னூரில் 90 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது. இதற்கடுத்து, அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் 80 மி.மீ., மழை பதிவானதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பிற இடங்களில் பதிவான மழையின் அளவு (மில்லி மீட்டரில்...): கடலூர் 50, சிதம்பரம், தொழுதூர், கொள்ளிடம், சீர்காழி, வேதாரண்யம், ராமேசுவரம், காங்கேயம் ஆகிய இடங்களில் தலா 40 என பரவலாக மழை பெய்துள்ளது.

அதே இடத்தில் நிலை கொள்கிறது: வெள்ளிக்கிழமை உருவான புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலையானது அதே இடத்தில் நிலை கொண்டுள்ளது. இலங்கை முதல் மத்திய மேற்கு ஆந்திரத்தை ஒட்டியுள்ள வங்காள விரிகுடா பகுதியில் உருவான அந்த தாழ்வு நிலையானது சனிக்கிழமையும் அதே இடத்தில் நிலை கொண்டிருக்கிறது.

இதனால், தமிழகத்தின் கடலோர மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் அடுத்த இரண்டு நாள்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தமிழகத்தின் உள்மாவட்டங்களிலும் பலத்த மழைக்கு வாய்ப்பு இருப்பதாக ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை, வானம் மேகமூட்டத்துடன் இருக்கும் எனவும், சில நேரங்களில் விட்டுவிட்டு மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்வதற்கு வாய்ப்பு உள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

9 பேர் பலி: தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கிய காலம் முதல் இதுவரை மழைக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 9-ஆக உயர்ந்துள்ளது. நீலகிரியில் 3 பேரும், விருதுநகர், சிவகங்கை, கன்னியாகுமரி, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவரும் என மொத்தம் ஒன்பது பேர் பலியாகியுள்ளனர்.

சென்னை, கடலூர், நெல்லை, கன்னியாகுமரி, கரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் சனிக்கிழமை காலையில் இருந்து மழை பெய்யத் தொடங்கியது. விட்டு விட்டு பெய்த மழையால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. கனமழையைத் தொடர்ந்து, மேட்டூர் உள்ளிட்ட பல்வேறு அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை மாலையில் 89.77 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 11 ஆயிரத்து 852 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

**சிவகங்கை: நெல் பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு**

First Published : 30 Oct 2011 12:53:06 PM IST

சிவகங்கை, அக். 30: சிவகங்கை மாவட்டத்தில் நடப்பு 2011-ம் ஆண்டு நெல் சம்பா பருவத்தில் திருந்திய தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்று வேளாண்மை இணை இயக்குநர் தட்சிணாமூர்த்தி கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

இந்த காப்பீட்டுத் திட்டம் அக்ரிகல்சுரல் இன்சூரன்ஸ் ஆஃப் இந்தியா என்ற மத்திய அரசு நிறுவனத்தால் நடத்தப்படுகிறது. அனைத்து நெல் விவசாயிகளும் காப்பீடு செய்துகொள்ளலாம்.

அடிமட்ட அளவில் பிர்காவுக்கு பதிலாக கிராமம் / கிராமப் பஞ்சாயத்து என்ற அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கிராமங்களும் இத்திட்டத்தின்கீழ் அடங்கும். மழை, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்கள் மற்றும் பூச்சி/நோய் தாக்குதல்களால் ஏற்படும் பயிர் இழப்புக்கும் காப்பீடு செய்யப்படுகிறது.

அனைத்து விவசாயிகளுக்கும் பிரீமியத் தொகையில் 60 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. ஒரு ஹெக்டேருக்கு செலுத்த வேண்டிய பிரீமியத் தொகை ரூ.603. இதற்கான காப்பீட்டுத் தொகை ரூ.11,770.

ஒரு ஹெக்டேர் ரூ.13,460க்கும் காப்பீடு செய்யலாம். ஆனால், இதற்கு பிரீமியத் தொகையில் அரசு மானியம் கிடைக்காது. இதற்கான பிரீமியத் தொகை ரூ.1,723 ஆகும்.

கடன் வசதி பெறும் விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் கட்டாயம் காப்பீடு செய்ய வேண்டும். கடன் வசதி பெறாதவர்கள் அவரவர் விருப்பப்படி காப்பீடு செய்துகொள்ளலாம்.

வங்கிகளில் கடன் பெறாத விவசாயிகள் காப்பீடு செய்ய கடைசி தேதி 15.11.2011. கடன் பெறும் விவசாயிகளுக்கு 30.11.2011 கடைசி தேதியாகும்.

எனவே விவசாயிகள் 10(1) மற்றும் அடங்கல் ஆவணங்களுடன் காப்பீட்டு படிவத்தை பூர்த்தி செய்து தொடக்கக் கூட்டுறவு வங்கி அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் பிரீமியத் தொகையை செலுத்தலாம் என்றார்.


தினமலர்
உண்மையின் உரைகல்


**உள்நாட்டில் உற்பத்தி அதிகரிப்பால் வேளாண் பொருட்கள் இறக்குமதி விரிவு**

அக்டோபர் 31,2011,00:23




புதுடில்லி:உள்நாட்டில் வேளாண் உற்பத்தி அதிகரித்துள்ளதால், தானியங்கள், பருப்பு வகைகள் உள்ளிட்ட பல்வேறு வேளாண் பொருட்கள் இறக்குமதி விரிவடைந்துள்ளது. இறக்குமதி: இது குறித்து மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சென்ற 2010-11ம் நிதியாண்டில், நாட்டின்வேளாண் பொருட்கள் இறக்குமதி, மதிப்பின் அடிப்படையில், 5.6 சதவீதம் விரிவடைந்து 56 ஆயிரத்து 196 கோடி ரூபாயாகக் குறைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், இதே காலத்தில், வேளாண் பொருட்கள் ஏற்றுமதி 34.5 விதவீதம் உயர்ந்து, 1 லட்சத்து 20 ஆயிரத்து 186 கோடி ரூபாய் என்ற அளவில் அதிகரித்துள்ளது.உள்நாட்டில்,வேளாண் உற்பத்தி

விÖதனை அளவை எட்டியதால், இறக்குமதி குறைந்து, ஏற்றுமதி உயர்ந்துள்ளது.கரும்பு: நடப்பாண்டில், சென்ற ஜூன் வரையிலான பயிர் பருவத்தில், கரும்பு, பருப்பு மற்றும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி மிகச் சிறப்பாக இருந்தது. Öவின்ற ஏப்ரல் மாதத்துடன் முடிவடைந்த 2010-11ம் நிதியாண்டில், நாட்டின் உணவு தானியங்கள் உற்பத்தி, 24.15 கோடி டன்னாக உயர்ந்து, புதிய விÖதனை படைத்தது. இதில், கோதுமை உற்பத்தி 8.6 கோடி டன்னாகவும், பருப்பு வகைகள் உற்பத்தி 1.80 கோடி டன் என்ற அளவிற்கும் இருந்தது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, இதுவரை இல்லாத அளவிற்கு 3.11 கோடி டன் என்ற உச்வித்தை எட்டி, புதிய விÖதனை படைத்தது.இதே காலத்தில், பல நாடுகளின் உணவு தானியங்கள் உற்பத் குறைந்திருந்த நிலையில், இந்தியா, உணவு தானியங்கள் உற்பத்தியில் அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டது.பருப்பு வகைகள்: இதனால், அயல்நாடுகளில் இருந்து உணவு தானியங்கள் இறக்குமதி செய்வது குறைந்து போனது. குறிப்பாக, பயறு மற்றும் பருப்பு வகைகள், பருத்தி, எண்ணெய் வித்துக்கள்,தேயிலை ஆகியவற்றின் இறக்குமதி குறிப்பிடத்தக்க அளவிற்கு குறைந்தது.அதே சமயம், உள்நாட்டில் வேளாண் உற்பத்தி அதிகரித்ததால், அதன் ஏற்றுமதி வளர்ச்சி கண்டுள்ளது. மதிப்பீட்டு காலத்தில், இவ்வகை பொருட்களின் ஏற்றுமதி 34.5 விதவீதம் உயர்ந்துள்ளது. குறிப்பாக விர்க்கரை, பருத்தி, பருப்பு வகைகள், விணல் மற்றும் பாகுக்கழிவு ஏற்றுமதி அதிகரித்துள்ளது.பருத்தி ஏற்றுமதி: Öவின்ற நிதியாண்டில், நம் நாட்டின் பருத்தி ஏற்றுமதி 68 லட்விம் பொதிகள் (ஒரு பொதி - 170 கிலோ), என்ற அளவில் இருந்தது. இதே காலத்தில் விர்க்கரை ஏற்றுமதி 26 லட்சம் டன் என்ற அளவிற்கு இருந்தது. உணவு தானியங்கள் ஏற்றுமதி அதிகரித்ததால், நம் நாட்டிற்கு அன்னியச் செலாவணி வரத்து கணிவிமாக உயர்ந்துள்ளது.நாட்டின் நலன் கருதி, மத்திய அரசு, அரிசி,கோதுமை, பருத்தி மற்றும் விர்க்கரை ஏற்றுமதிக்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டிருந்தால், நாட்டின் உணவு தானியங்கள் ஏற்றுமதி குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்திருக்கும் என இத்துறையை சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.கடந்த மூன்று ஆண்டுகளில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், வேளாண் மற்றும் அது விÖர்ந்த துறைகளில்மேற்கொள்ளப்பட்ட முதலீடு 18.7 விதவீதம் அதிகரித்துள்ளது. இது, கடந்த 10வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2002-07) 12.5 சதவீதம் என்ற அளவில் குறைந்து காணப்பட்டது.முதல் ஐந்தாண்டு திட்ட காலத்தில், வேளாண் உற்பத்தி துறையில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு 6.3 விதவீதமாக இருந்தது. இது, 5வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 11.3 விதவீதமாக உயர்ந்தது. எனினும், ஒன்பதாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இது, 9.8 விதவீதமாக குறைந்திருந்தது.பருவ மழை: நாடு முழுவதும் பருவம் தவறாமல் பெய்து வரும் மழையால், வேளாண் விளை பொருட்களின் உற்பத்தி சிறப்பான அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது. இதனால், உணவு தானியங்களின் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மத்திய அரசு தளர்த்த @வண்டும் என்று இத்துறையினர்கேட்டுக் கொண்டுள்ளனர். அவ்வாறு தளர்த்தப்பட்டால், நம் நாடு, அதிக அளவில் அன்னியச் செலாவணியை ஈட்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

**வெங்காய விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி**

அக்டோபர் 31,2011,00:17



கோவை: தமிழகத்தில் ஒரு வாரமாக பெய்து வரும் கன மழை காரணமாக, வெங்காயம் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கர்நாடக மாநிலம் பெல்லாரி மற்றும் தமிழகத்தில் கோவை, பல்லடம் பகுதிகளில் பெரிய வெங்காயம் அதிக அளவில் விளைகிறது. சிறிய வெங்காயத்தை பொறுத்தவரை, ஈரோடு, நாமக்கல், திருப்பூர், கோவை மாவட்டங்களில், மஞ்சள் பயிர் மற்றும் தென்னந்தோப்பில் ஊடுபயிராக வெங்காயம் விளைவிக்கின்றனர். விளைநிலங்களில் அறுவடை செய்த சிறிய வெங்காயத்தை விவசாயிகள், ஈரோடு, தாராபுரம், அந்தியூர், உடுமலை சந்தைக்கு விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். இங்கிருந்தே தமிழகத்தின் பிற பகுதிக்கு சிறிய வெங்காயம் அனுப்பப்படுகிறது.ஆகஸ்ட் மாதம் வெங்காயம் அறுவடை துவங்கிய போது, சிறிய வெங்காயம் கிலோ ஐந்து ரூபாய் வரை சரிந்தது. விவசாயிகள் பெரிதும் நஷ்டமடைந்தனர். தங்கள் தோட்டங்களிலேயே பரண் அமைத்து, காற்றோட்டமாக வெங்காயத்தை இருப்பு வைத்தனர். பத்து நாட்களுக்கு முன் வரை கூட, சிறிய வெங்காயம் விலை கிலோ 10 ரூபாயைத் தாண்டவில்லை. இந்நிலையில், தமிழகத்தில் கடந்த ஒரு வாரமாக பலத்த மழை பெய்து வருவதால், விந்தையில் வெங்காயம் வரத்து கணிசமாகக் குறைந்துள்ளது. அதேவிமயம், தீபாவளி பண்டிகை காரணமாக வெங்காயத்தின் தேவையும் அதிகரித்தது. இதனால், வெங்காயத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, கிலோவுக்கு நான்கு ரூபாய் வீதம் விலை உயர்ந்துள்ளது. கடந்த சில மாதங்களாக வெங்காயத்துக்கு போதிய விலை கிடைக்காமல், விவசாயிகள் இழப்பை சந்தித்து வந்தனர். தற்போது, விலை அதிகரிக்கத் துவங்கியுள்ளதால், விவசாயிகள் ஆனந்தக் கண்ணீரில் மிதக்கின்றனர். மேலும் விலை உயர வாய்ப்புள்ளதால், விவசாயிகள் குடோன்களில் வெங்காயத்தை பதுக்கி வைக்கத் துவங்கியுள்ளனர். ஈரோட்டைச் சேர்ந்த வெங்காய மொத்த விற்பனையாளர் பழனிச்சாமி கூறியதாவது:ஈரோடு, கோவை, திருப்பூர் மாவட்டங்களில் பயிராகியுள்ள சிறிய வெங்காய வயல்களில், மழை நீர் வெளியேறாமல் தேங்கியுள்ளது. விளைநிலங்களிலேயே வெங்காயம் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது. தவிர,

அறுவடை செய்து, இருப்பு வைக்கப்பட்டுள்ள வெங்காயம் மழையில் நனைந்தாலும், வீணாகி விடும்.இதை தவிர்ப்பதற்காக, விவசாயிகள் அறுவடை செய்த வெங்காயத்தை, வெயிலடிக்கும் போது காய வைத்து, உடனே, பாதுகாப்பான இடங்களில் இருப்பு வைக்கின்றனர். இதனால், மார்க்கெட்டுக்கு பெரிய, சிறிய வெங்காயம் வரத்து கணிசமாகக் குறைந்து வருகிறது. இதனால், விலை அதிகரித்துள்ளது.சைவ, அசைவ சமையலுக்கு வெங்காயத்தின் பங்களிப்பு அதிகம் உள்ளதால், மக்கள் அதிகம் வாங்கிச் செல்கின்றனர்.அக்டோபர் 24ம் தேதி கிலோ, 18 ரூபாய்க்கு விற்ற சிறிய வெங்காயம், தீபாவளிக்கு முதல் நாள், 25ம் தேதி திடீரென, 6 ரூபாய் உயர்ந்து, 24 ரூபாய்க்கு விற்பனையானது. பெரிய வெங்காயமும், கிலோ 22 ரூபாயை எட்டியது. மழை நீடித்தால், வெங்காயம் விலை இமலும் உயர வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**மண் அரிப்பை தடுக்கும் கயிறு உற்பத்தி தீவிரம்**

அக்டோபர் 31,2011,00:16



ஈரோடு:வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால், மலைப்பகுதியில் ஏற்படும் மண் அரிப்பை தடுக்க உதவும் கயிறு உற்பத்தி, ஈரோட்டில் மும்முரமாக நடைபெற்று வருகிறது. தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. பலத்த மழை பொழியும்போது மலைப்பாங்கான பகுதியில் மண் அரிப்பு ஏற்படும். வடகிழக்கு பருவமழையால் தமிழகம், ஆந்திரா, ஒடிசா மாநிலங்களில், மலைப்பாங்கான பகுதிகளில் மண் சரிவு ஏற்படுவது வாடிக்கை. குறிப்பாக, தமிழகத்தில் ஊட்டி, குன்னூர், கொடைக்கானல் ஆகிய இடங்களில், அதிகளவில் மண் அரிப்பு ஏற்படும்.மண் அரிப்பை தடுக்க, மூங்கில் அல்லது சவுக்கு கம்புகளால் சாரம் அமைத்து, பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்வர். சாரம் கட்ட தேங்காய் நார் கயிறுகளே அதிகம் பயன்படுத்துவர். மழைக்காலம் துவங்கியுள்ளதால், கயிறு உற்பத்தி தீவிரமடைந்துள்ளது. ஈரோடு, ரங்கம்பாளையம், அறச்சலூர், வெள்ளோடு, கவுந்தப்பாடி, வீரப்பன்சத்திரம் பகுதியில் சிறியதும், பெரியதுமாக கயிறு உற்பத்தி ஆலைகள் பல உள்ளன. இவற்றில், கயிறு உற்பத்தி அதிகரித்துள்ளது.ஈரோடு ரங்கம்பாளையம் கயிறு உற்பத்தியாளர் விவேகானந்தன் கூறியதாவது:தேங்காய் மட்டையில்

இருந்து உரிக்கப்படும் நார்கள் வெள்ளை, பழுப்பு என இரு வகையாக பிரிக்கப்படுகின்றன. அறச்சலூர் பகுதியில் தேங்காய் உற்பத்தி ஆலைகள் அதிகம் உள்ளன. இப்பகுதியில் இருந்து, 35 கிலோ எடையுள்ள தேங்காய் நார் பேல்களை, 630 ரூபாய்க்கு வாங்கி வருகிறோம்."ஹோக்கிலிங்' என்ற இயந்திரம் மூலம், தூசி அகற்றப்பட்டு, நார் தயாராகிறது. அதன்பின், "ஸ்பின்னிங்' இயந்திரம் மூலம் கயிறாக திரிக்கப்படுகிறது. இந்த ஸ்பின்னிங் இயந்திரம் பழையவை, 60 ஆயிரம் ரூபாய்க்கும், புதியவை, 90 ஆயிரம் ரூபாய்க்கும் விற்கப்படுகின்றன. இயந்திரத்தில், 35 கிலோ நாரை கொடுத்து நெய்யும் போது, 30 கிலோ கயிறு கிடைக்கிறது. ஒரு கிலோ கயிறு, 27 ரூபாய்க்கும், 15 கிலோ கொண்ட பேல், 405 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.தற்போது மழைக்காலம் என்பதால், மலைப்பாங்கான பகுதியில் மண் அரிப்பு ஏற்படும். இந்த சமயத்தில் கயிற்றின் தேவை அதிகமிருக்கும். ஆந்திரா, பீகார், ஒடிசா போன்றவை எப்போதும் வெள்ளத்தால் பாதிக்கப்படுபவை என்பதால், இம்மாநிலங்களுக்கு அதிகளவில் கயிறு அனுப்பி வைக்கப்படுகிறது. தமிழகத்தில் அதிகப்படியாக ஊட்டி, குன்னூர், கொடைக்கானல் பகுதிக்கு கயிறு அதிகளவில் அனுப்பப்படுகிறது. கயிறு உற்பத்தியில் மீதமாகும் கழிவு நாரைக் கொண்டு, கால் மிதியடி தயாராகிறது. இவ்வாறு விவேகானந்தன் கூறினார்.

**மூலப்பொருட்கள் தட்டுப்பாட்டால் கறிக்கோழி தீவனம் விலை உயர்வு**

அக்டோபர் 31,2011,00:02

---



நாமக்கல்: தமிழகத்தில், கோவை, பல்லடம், திருப்பூர் ஆகிய இடங்களில், அதிக அளவில் கறிக்கோழிப் பண்ணைகள் உள்ளன. அதற்கு அடுத்ததாக, வேலூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, மதுரை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் கறிக்கோழி உற்பத்தி பண்ணைகள் உள்ளன. அங்கு உற்பத்தி செய்யப்படும் கறிக்கோழி, தமிழகம் மட்டுமின்றி, கேரளா, கர்நாடகா போன்ற வெளிமாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. கேரள மாநிலத்துக்கு நாள்தோறும், 3 லட்சம் கிலோ கறிக்கோழி விற்பனைக்கு செல்கிறது. அதன் மூலம் கோடிக்கணக்கான ரூபாய் வர்த்தகம் நடந்து வருகிறது.கறிக்கோழிகளின் வளர்ச்சிக்கு, மக்காச்சோளம், சோயா

உள்ளிட்டவை அடங்கிய தீவனம் வழங்கப்படுகிறது. இந்த மூலப்பொருட்களை, தமிழகம் மற்றும் வடமாநிலங்களில் இருந்து, தீவன உற்பத்தியாளர்கள் கொள்முதல் செய்கின்றனர். தீவனப் பொருட்களின் தேவை அதிகரிப்பு, உற்பத்தி குறைவு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், அவற்றின் விலை ஒவ்வொரு ஆண்டும் பல மடங்கு அதிகரித்து வருகிறது. அதன்படி, 2001-02ம் ஆண்டு செப்டம்பர் மாத நிலவரப்படி, 75 கிலோ எடை கொண்ட கறிக்கோழி தீவன மூட்டை சராசரியாக, 833 ரூபாய் வீதம் விற்பனை செய்யப்பட்டது. 2002-03ம் ஆண்டு, 100 ரூபாய் வீதம் ஏற்றம் கண்டு, 922 ரூபாயாக இருந்தது. 2007ம் ஆண்டு வரை தீவனப் பொருட்களின் விலை சீரான ஏற்றம் கண்டு வந்தது.அதன் பின், அவற்றின் விலை ஒவ்வொரு ஆண்டும் இரு மடங்கு ஏற்றம் காணத் துவங்கியது. 2007-08ம் ஆண்டு, 75 கிலோ எடை கொண்ட தீவன மூட்டை, 1,171 ரூபாய் வீதம் இருந்தது. அதே எடை கொண்ட தீவன மூட்டை, 2008-09ம் ஆண்டு, 400 ரூபாய் வீதம் ஏற்றம் கண்டு, 1,509 ரூபாயாக அதிகரித்தது. 2010-11ம் ஆண்டு, 1,678 ரூபாயாக தீவனத்தின் விலை உள்ளது.ஒவ்வொரு ஆண்டும் தீவனத்தின் விலை ஏற்றமான சூழலில் உள்ளது. உற்பத்தி குறைவு, தேவை மிகுதி ஒரு புறம் இருந்தாலும், ஆன்-லைன் வர்த்தகத்தில் தீவன மூலப்பொருட்கள் கொண்டு வந்ததும், இவ்விலையேற்றத்துக்கு முக்கிய காரணம் என, கறிக்கோழிப் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.இ@த நிலை நீடித்தால், வரும் ஆண்டு 75 கிலோ எடை கொண்ட கறிக்கோழி தீவனப் பொருட்களின் விலை, 1,858 ரூபாயாக உயரும் என, பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**முட்டை விலை இப்போதைக்கு கீழே இறங்காது:விலை உயர்வுக்கு காரணம் என்ன?**
அக்டோபர் 31,2011,09:32



தமிழகத்தில் முட்டை விலை ஒரே வாரத்தில், 50 காசு உயர்ந்துள்ளது. அடுத்த சில மாதங்களுக்கு விலை உயர்வு நீடிக்கும் என, முட்டை உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர். மழை, குறைந்த விளைச்சல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், காய்கறிகளின் விலை, வரலாறு காணாத அளவு உயர்ந்து வருகிறது. இந்நிலையில், நடுத்தர மக்களுக்கு, நல்ல சத்துணவாக இருந்து வரும்

முட்டையின் விலையும் இப்போது உயர்ந்துவிட்டது. கடந்த சில மாதங்களாக, சில்லரை வர்த்தகத்தில், ஒரு முட்டை விலை, 3 ரூபாய்க்கு விற்கப்பட்டு வந்தது. ஆனால், திடீரென கடந்த சில தினங்களாக முட்டை விலை, 50 காசுகள் உயர்ந்து, தற்போது, 3.50 காசுக்கு விற்கப்படுகிறது. ஒரு சில கடைகளில், 3.30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.இதுகுறித்து சென்னை சேர்ந்த சில்லரை வியாபாரி குமார் கூறும்போது, ""வழக்கமாக மழைக்காலத்தில் முட்டை விலை உயரும். ஆனால், கடந்த ஓரிரு நாளில் திடீரென, 50 காசுகள் வரை உயர்த்தப்பட்டுள்ளது. முன்பெல்லாம், 10 காசு 20 காசு என படிப்படியாக உயரும். ஆனால், இப்போது, ஒரேயடியாக, 50 காசுகள் வரை உயர்த்திவிட்டனர்,'' என்றார். நாமக்கலில் உள்ள தமிழ்நாடு முட்டை உற்பத்தியாளர் சங்க தலைவர் நல்ல தம்பி கூறியதாவது: நவம்பர், டிசம்பரில் முட்டை விலை உயர்வது வழக்கமானதுதான். சில நேரங்களில் கன மழை காரணமாக, போக்குவரத்து தடங்கல்களால் சில்லரை வியாபாரத்தில் திடீரென, 50 காசுகள் வரை உயர்த்திவிடுகின்றனர்.தமிழகத்தில் தினமும், 3 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் பெரும் பகுதி வட மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன. வட மாநிலங்களில் குளிர்காலத்தில் முட்டைக்கு கிராக்கி அதிகம். இந்நிலை பிப்ரவரி வரை நீடிக்கும். மார்ச், ஏப்ரலில் விலை மீண்டும் இறங்குமுகத்துக்கு வரும்.மொத்த வியாபாரத்தில் ஒரு முட்டை விலை, 2.82 ரூபாய் தான். எங்களுக்கு அடக்க விலையே, 2.25 ரூபாய் ஆகிறது. தீவனங்களின் விலை உயர்வு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கோழி பராமரிப்புக்கு அதிக செலவிட வேண்டியுள்ளது.தமிழகத்தில் சத்துணவு திட்டத்துக்காக வாரத்துக்கு, 3.5 கோடி முட்டைகள் கொள்முதல் செய்யப்படுவதால், எங்களுக்கு எல்லா காலத்திலும் நியாயமான விலை கிடைக்கிறது.இவ்வாறு நல்லதம்பி கூறினார். புல்லட்பாயிண்ட் ;தமிழ்நாடு மளிகை வியாபாரிகள் சங்கத் தலைவர் சொரூபன் கூறுகையில், ""வட மாநிலங்களில் குளிர் துவங்கிவிட்டது. இதனால் முட்டையின் தேவையும் அதிகரித்துள்ளது. மேலும், சத்துணவுக்கு வாரம், 3.5 கோடி முட்டைகள் கொள்முதல் செய்யப்படுகின்றன. இதுதான் முட்டை விலை உயர்வுக்கு காரணம். மொத்த வியாபாரத்தில் எங்களுக்கு, 2.80 ரூபாய் என்ற விலைக்கு முட்டை கிடைக்கிறது. காய்கறி பற்றாக்குறையும் முட்டை விலை உயர ஒரு காரணம்,'' என்றார்.

**"விதைத்தரம் அறிந்து விதைத்தால் நல்ல மகசூல்'**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 31,2011,02:49 IST

கோவை : "விதையின் தரம் அறிந்து விதைப்பு செய்தால் நல்ல மகசூல் பெறலாம்' என, விதை பரிசோதனை அலுவலர் தெரிவித்துள்ளார். கோவை விதை பரிசோதனை அலுவலர் மோகனசுந்தரம் அறிக்கை: விவசாயிகள் விதைக்கும் முன் விதைத்தரம் அறிந்து விதைப்பு மேற்கொள்ள வேண்டும். நல்ல விதைக்கென சில குணாதிசயங்கள் உள்ளன. அதிக முளைப்பு

திறன், அதிக புறத்தூய்மை, அளவான ஈரப்பதம், பிறரக கலப்பு இல்லாமல் இருத்தல், பூச்சி நோய் தாக்குதல் இல்லாமல் இருத்தல் ஆகியன நல்ல விதையில் இருக்க வேண்டிய சிறப்பியல்புகள். விதை பரிசோதனை செய்வதால் விதைப்பதற்கு தகுதியான விதைகளின் தரம் நிர்ணயிக்கப்படுகிறது. விதைத் தரத்தில் ஏற்படும் பிரச்னைகளையும், அதற்குண்டான காரணங்களையும் அறிய முடிகிறது. விதைகளை காயவைக்கவும் சுத்தம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அறிந்து கொள்ள உதவுகிறது.

விதை தரத்துக்குட்பட்டு சான்றளிப்புக்கு ஏற்றதா அல்லது உண்மைநிலை தரத்துக்கு ஏற்றதா என கண்டறிய உதவுகிறது. விதை விற்பனையாளர்களும், விவசாயிகளும் இப்பருவத்தில் விதைப்பதற்காக வைத்துள்ள விதையின் தரம் அறிந்து விற்பனை அல்லது விதைப்பு செய்தால் நல்ல மகசூல் பெறலாம். விதை பரிசோதனை செய்ய ஒரு மாதிரிக்கு 30 ரூபாய் வீதம் பயிர் ரகம், குவியல் எண் ஆகிய விவரங்களை குறிப்பிட்டு, முகப்பு கடிதத்துடன் விதை பரிசோதனை நிலையத்துக்கு அனுப்பி வைத்தால், பரிசோதனை முடிவுகள் அவரவர் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். விதை மாதிரியை, விதை பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், விதைச்சான்று இயக்குனர் அலுவலக வளாகம், ஜி.சி.டி. (அஞ்சல்), கோவை 13 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு, அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**பசுந்தீவனங்கள் உற்பத்தி அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 31,2011,02:57 IST

பல்லடம் : பசுந்தீவனங்கள் உற்பத்தி அதிகரித்துள்ளதால், கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் உற்சாகமடைந்துள்ளனர். பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் விவசாயத்துக்கு அடுத்தபடியாக கால்நடை வளர்ப்பு முக்கிய தொழிலாக உள்ளது; 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட கறவை மாடுகள், செம்மறியாடு, வெள்ளாடு என 5,000 ஆடுகள் உள்ளன. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு வரை, சுட்டெரித்த கோடையால் கால்நடைகள் விரும்பி உண்ணும் பசும்புல், கோரைப்புல் கருகின. விவசாயிகள் கால்நடைகளுக்கு பசுந்தீவனங்கள் தர முடியாமல் தவித்தனர். பசுந்தீவனங்கள் வழங்காததால் கறவை மாடுகளில் இரண்டு முதல் மூன்று லி., வரை பால் உற்பத்தி குறைந்தது. கறவை மாடு வளர்ப்பை மட்டுமே முழுநேர தொழிலாக கொண்டு இருந்த விவசாயிகள் கவலையடைந்தனர். பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் தினமும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது; மேய்ச்சல் நிலங்களில் பசுந்தீவனங்கள் நன்கு

முளைத்து அறுவடை செய்யும் அளவுக்கு உற்பத்தியாகியுள்ளது. பல்லடம், சுல்தான்பேட்டையில் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் உற்சாகமடைந்துள்ளனர்.

**பாபநாசம் அணை நீர்மட்டம் ஒரே நாளில் 9 அடி உயர்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 31,2011,03:30 IST

விக்கிரமசிங்கபுரம் : காரையார் வனப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் பாபநாசம் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் சுமார் 9 அடி உயர்ந்தது. வடகிழக்கு பருவமழையின் தீவிரத்தால் நெல்லை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. பாபநாசம், காரையார், சேர்வலார் பகுதிகளிலும் அதிகளவில் மழை பெய்து வருகிறது. காரையார், சேர்வலார் வனப்பகுதிக்குள் பல்வேறு கிளை அருவிகள் உருவாகி விழுந்து கொண்டிருக்கிறது. இதனால் பாபநாசம் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் பாபநாசம் அணையின் நீர்மட்டம் 67 அடியாக இருந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு முதல் கனமழை பெய்தது. இதன் காரணமாக பாபநாசம் அணையின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்தது. நேற்று மாலை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 75.40 அடியாக இருந்தது. மழையின் காரணமாக ஒரே நாளில் பாபநாசம் அணையின் நீர்மட்டம் சுமார் 9 அடி உயர்ந்தது. அணைக்கு விநாடிக்கு 3932.45 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 227.25 கனஅடி நீர் வெளியேறியது. அணைப் பகுதியில் 80 மி.மீ., பாபநாசம் கீழணையில் 67 மி.மீ. அளவில் மழை பதிவாகியுள்ளது.

சேர்வலார் அணையின் நீர்மட்டம் சுமார் 10 அடி அதிகரித்து நேற்று 93.99 அடியாகியது. இந்த அணைப் பகுதியில் 86 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 41.25 அடியாகியது. இந்நிலையில் நேற்றும் காரையார், சேர்வலார் பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் பாபநாசம் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது.

கருப்பாநதி அணை : கடையநல்லூர் கருப்பாநதி அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 6 அடி உயர்ந்துள்ளது. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் நேற்று முன்தினம் இரவில் பெய்த கனமழை காரணமாக கருப்பாநதி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி அணைக்கு விநாடிக்கு 140 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. நேற்று முன்தினம் அணையின் நீர்மட்டம் 42 அடியாக இருந்தது. மழை காரணமாக ஒரே நாளில் நீர்மட்டம் 6 அடியாக உயர்ந்து 48 அடியாக காணப்பட்டது. அணைப்பகுதியில் 8 மி.மீ. மழை பதிவாகியுள்ளதாக

பொதுப்பணித்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது. கருப்பாநதி அணைக்கு தண்ணீர்வரத்து ஏற்பட்டுள்ளதால் பிசான சாகுபடி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**மாவட்டம் முழுவதும் தொடர் மழை; நீர் நிலைகளுக்கு நீர் வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 31,2011,03:24 IST

தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக நீர் நிலைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் நடவுப் பணிகளை தொடங்கியுள்ளனர். மணியாச்சியில் அதிகபட்சமாக 65மிமீ., மழை பதிவாகியுள்ளது. வங்க கடலில் உருவாகியுள்ள குறைவழுத்த தாழ்வு நிலை காரணமாக கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் தூத்துக்குடி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த ஒரு வாரகாலமாக பலத்த மழை பெய்து வருகிறது. கடும் கோடை வெயில் காரணமாக வறண்டு காணப்பட்ட நீர் நிலைகளுக்கு எல்லாம் தொடர் மழை காரணமாக ஓரளவிற்கு நீர் வரத் தொடங்கியது. நீரின்றி கருகிய நிலைக்கு சென்று கொண்டிருந்த வாழை மரங்களுக்கு தண்ணீர் கிடைக்கத் தொடங்கியதால் வாழை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் எல்லாம் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்த தொடர் மழை காரணமாக கோவில்பட்டி, கயத்தாறு, ஒட்டபிடாரம், விளாத்திக்குளம் போன்ற இடங்களில் எல்லாம் மானாவாரி விவசாயப் பணிகள் மும்முரமாக தொடங்கியுள்ளது. கிணறு மற்றும் குளங்கள் மூலம் பாசன வசதியுள்ள பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் நெல் நடவிற்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேபோல் தாமிரபரணி நதியில் தண்ணீர் வரத்து அதிகரிக்க தொடங்கியுள்ளதால் பாசன வாய்கால்களில் தண்ணீர் ஓடத் தொடங்கியுள்ளது.

கடந்த ஒரு வாரகாலமாக விட்டுவிட்டு கன மழை பெய்து வந்தாலும் நேற்று முன்தினம் இரவு பல்வேறு பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக பல குளங்கள் நிரம்பத் தொடங்கியுள்ளது. தொடர் மழை நீடித்தால் இன்னும் சில நாட்களில் பல குளங்கள் முற்றிலுமாக நிரம்பிவிடும் நிலையில் உள்ளது. நேற்று காலை வரையிலும் தூத்துக்குடி மாவட்டத்தில் அதிகபட்சமாக மணியாச்சியில் 65 மி.மீட்டரும், குறைந்தபட்சமாக கோவில்பட்டியில் 2 மி.மீட்டரும் மழை பதிவாகியுள்ளது. மேலும் ஓட்டபிடாரம்-32, வேடநத்தம்-30, கீழஅரசரடி-10, எட்டையாபுரம்-4, சாத்தான்குளம்-49, ஸ்ரீவைகுண்டம்-49, தூத்துக்குடி-27.5, திருச்செந்தூர்-19, காயல்பட்டணம்-17, குலசேகரன்பட்டணம்-59, விளாத்திக்குளம்-6, வைப்பார்-23, சூரங்குடி-10, கயத்தாறு-39, கடம்பூர்-18, கழுகுமலை-10 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. நேற்று முன்தினம் இரவு காற்றுடன் கூடிய மழை பெய்ததால் பல இடங்களில் வாழை மரங்கள்

சாய்ந்துள்ளது. கடந்த ஒரு வாரகாலமாக பெய்து வரும் மழையால் தூத்துக்குடி மாவட்டத்தில் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டிருந்த உப்பளங்கள் நீரில் மூழ்கியுள்ளது. மேலும் பகல்,இரவு என விட்டு விட்டு மழை பெய்து வருவதால் பொதுமக்கள் வீடுகளில் முடங்கிபோய் உள்ளனர்.

**மரவள்ளி கிழங்கு விலை சரிவு விவசாயிகள் கடும் அதிர்ச்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 30,2011,00:27 IST

சிறுபாக்கம் : மரவள்ளி கிழங்கு விலை சரிவு ஏற்பட்டதால் விவசாயிகள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர். கடலூர் மாவட்டம், மங்களூர் மற்றும் நல்லூர் ஒன்றியங்களை சேர்ந்த சிறுபாக்கம், மங்களூர், ஒரங்கூர், ஆவட்டி, வேப்பூர், பெரியநெசலூர், பூலாம்பாடி, நிராமணி, நல்லூர் உள்ளிட்ட 150க்கும் மேற்பட்ட சிறு,குறு விவசாயிகள் தங்களின் நீர்ப்பாசன நிலங்களில் ஒருவருட பயிரான பர்மா, குங்குமரோஸ், வெள்ளை ரோஸ் ரக மரவள்ளி கிழங்கு பயிரிட்டு வருகின்றனர். கடந்த ஆண்டு மூட்டை 300 முதல் 500 ரூபாயிற்கு விலைபோன மரவள்ளிக் கிழங்கு இந்தாண்டு துவக்கத்திலேயே திடீரென விலை சரிந்து 150 முதல் 200 ரூபாயிற்கு வியாபாரிகள் கொள்முதல் செய்வதால் விவசாயிகள் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளனர். அரசு உரிய நடவடிக்கை மேற்கொண்டு மரவள்ளிக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**மருத்துவ குணம் வாய்ந்தபசலை கீரை சாகுபடிசெய்ய அழைப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 30,2011,02:37 IST

நாமக்கல்: "மருத்துவ குணம் வாய்ந்த பசலைக் கீரையை, விவசாயிகள் சாகுபடி செய்ய வேண்டும்' என, நாமக்கல் வேளாண் துணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:பசலைக் கீரையில் வைட்டமின் ஏ 5,580 மைக்ரோ கிராம், ரிபே பிளாவின் 0.26 மி.கி., நியாசின் 0.5 மி.கி., வைட்டமின் சி 28 மி.கி., இவற்றுடன் இரும்புச் சத்து 10.9 மி.கி., உயர் அளவில் உடையது. சுண்ணாம்பு சத்து, 73 மி.கி., பாஸ்பர் 21 மி.கி., மேலும் சல்ஃபர் க்ளோரின் உள்ளது. அவை சுத்திகரிக்கும் பண்புடையது. மலச்சிக்கலை அகற்றும் பசலைக் கீரை கருச்சிதைவை தடுக்கும. ஆண்மைக் குறைவை குணமளிக்கும்.

இதில் உள்ள வைட்மின் சி, இ முக்கிய காரணிகளாய் செயல்படும். பற்களின் ஆரோக்கியத்துக்குப்

பசலை கீரை சாற்றுடன் காரட் சாறும் கலந்து பருக வேண்டும்.குறைந்த கலோரி மதிப்புடைய பசலைக் கீரையை நீரிழிவுக்காரர்களும் பயன்படுத்தலாம். பசலை சாற்றில் வாய் கொப்பளித்தால் தொண்டைப் புண் குணமாகும். சோர்வுற்ற நரம்புகளை தட்டி எழுப்பும் பசலைக் கீரையை நரம்பு டானிக் எனவும் அழைக்கலாம். எனவே, விவசாயிகள் இயற்கை முறை சாகுபடியில் பசலைக் கீரையை சாகுபடி செய்து பயன்பெற வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தரமான தேயிலை உற்பத்திக்கு 6 மாதங்களில் ரூ.10 கோடி ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 30,2011,00:01 IST

ஊட்டி : "தரமான தேயிலை உற்பத்தி செய்வதற்காக கடந்த 6 மாதங்களில் தேயிலை வாரியம் 10 கோடி ரூபாய் மானியம் அளித்துள்ளது,' என தேயிலை வாரிய செயல் இயக்குனர் தெரிவித்தார். தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் ஊட்டியில் கூறியதாவது; உலகில் தரமான தேயிலை உற்பத்தியில் கென்யா முதலிடம் வகிக்கிறது. சீனா இரண்டாவது இடத்திலும், இலங்கை மூன்றாம் இடத்திலும், இந்தியா நான்காவது இடத்தில் உள்ளன. இதில்,ஏற்றுமதியில் சீனா அபரீத வளர்ச்சி பெற்று தற்போது ஏற்றுமதி அளவை இரண்டு மடங்காக அதிகரித்து உள்ளது. ஆனால் இந்தியா தேயிலை ஏற்றுமதியில் பின் தங்கி வருகிறது. கடந்த பத்தாண்டுகளாக தேயிலை வாரியம் மூலம் தர மேம்பாட்டு முகாம் நடத்தியதால் தேயிலையின் தரம் உயர்ந்துள்ளது. இதனால் பசுந்தேயிலைக்கு தற்போது குறைந்தபட்சம் கிலோவுக்கு 10 ரூபாய் கிடைத்து வருகிறது. தமிழகத்தில் குறைந்தபட்ச தேயிலை தூளின் விலை கிலோ ஒன்றுக்கு 66 ரூபாயாக நிர்ணயக்கப்பட்டுள்ளது. இந்த விலையை விட கூடுதல் விலை தற்போது கிடைத்து வருகிறது. விவசாயிகள் தேயிலை செடிகளை கவாத்து செய்வதற்கும், தேயிலை பறிக்கவும் இயந்திரங்கள் வழங்க மானியம் வழங்கப்படுகிறது. கடந்த 2010-11ம் ஆண்டு 4.5 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டது. ஆனால், இந்தாண்டு ஏப்ரல் மாதம் முதல் அக்டோபர் வரை 6 மாதங்களில் 10 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டது. இதன் மூலம் தோட்ட மேம்பாட்டுக்கு ஏக்கருக்கு 34 ஆயிரம் ரூபாயும், கவாத்து செய்வதற்கு எக்டருக்கு 34 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இவ்வாறு அம்பலவாணன் கூறினார்.

**ஒரு வாரத்தில் 160 செ.மீ., மழை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 30,2011,00:01 IST

ஊட்டி : ஊட்டி கோடப்பமந்து பகுதியில் நெடுஞ்சாலைத்துறை மூலம் மணல் மூட்டைகள் அடுக்கி தற்காலிக தடுப்பு சுவர் அமைக்கப்பட்டு வருகிறது. நீலகிரியில் கடந்த ஒரு வார காலமாக வடகிழக்கு பருவ மழை பெய்து வந்தது. மழை காரணமாக ஆங்காங்கே சிறிய அள வில் மண் சரிவு ஏற்பட்டது. நீலகிரியில் கடந்த ஒரு வார காலமாக 1,680 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. இந்நிலையில் நேற்று முன்தினம் ஊட்டி-கோத்தகிரி சாலையில் கோடப்பமந்து பகுதியில் மழையினால் தடுப்பு சுவர் இடிந்து விழுந்தது. இப்பகுதியில் நெடுஞ்சாலைத்துறையினர் மணல் மூட்டைகள் அடுக்கி தற்காலிக சுவர் அமைத்து வருகின்றனர். நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் முருகன் கூறுகையில்,"" அவசர தேவைக்காக 8 ஆயிரம் மணல் மூட்டைகள் தயார் நிலையில் உள்ளன," என்றார்.

**திருச்சி மாவட்டத்தில் 592.5 மி.மீட்டர் மழை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 30,2011,23:48 IST

திருச்சி: திருச்சி மாவட்டம் முழுவதும் நேற்று முன்தினம் ஒரே நாளில் 592.5 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. வங்கக்கடலில் மையம் கொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால், தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவமழை பரவலாக மழை பெய்து வருகிறது. திருச்சி மாவட்டம் முழுவதும் நேற்று முன்தினம் நல்ல மழை பெய்தது. நேற்று முன்தினம் ஒரே நாளில் 592.5 மி.மீ., மழை பெய்தது. மாவட்டம் முழுவதும் சராசரியாக 25.76 மி.மீட்டராக மழையளவு பதிவாகியுள்ளது. திருச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழையளவு (மில்லி மீட்டரில்) விபரம் வருமாறு: லால்குடி 19, மணப்பாறை 26.40, முசிறி 20, புள்ளம்பாடி 25.60, தா.பேட்டை 6, துறையூர் 10, திருச்சி ஏர்போர்ட் 78, திருச்சி டவுன் 28.40, மருங்காபுரி 37.40, பொன்னணியாறு அணை 35.40, நவலூர் கொட்டப்பட்டு 44, நந்தியாறு 22, கல்லக்குடி 15.20, வாத்தலை அணைகட்டு 16.60, சமயபுரம் 12.50, சிறுகுடி 7, புலிவலம் 5, குப்பம்பட்டி 11, கோவில்பட்டி 10.20, பொன்மலை 52.80, திருச்சி ஜங்ஷன் 63, துவாக்குடி 47 என மொத்தம் 592.5 மி.மீ., மழை பதிவானது. சராசரியாக 25.76 மி.மீ., மழையளவு பதிவாகியுள்ளது.

**விதை நெல் தரம் பிரித்தல்: விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 30,2011,22:45 IST

தேனி : விவசாயிகளுக்கு விதை நெல் தரம் பிரித்தல் குறித்த பயிற்சி நடந்தது. "நெல்லில் தரமான விதை உற்பத்தி' என்ற திட்டத்தின் கீழ், தேனி அருகே கோடாங்கிபட்டியில் மாதிரி செயல் விளக்க திடல் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு நடந்த வயல் விழாவில் நீர்நிலவள திட்டத்தின் பொறுப்பாளர் கதிரவன் செயல் விளக்கம் செய்து காட்டினார். 15 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு பிளாஸ்டிக் வாளியில் 10 லிட்டர் தண்ணீர் எடுத்துக் கொள்ள வேண்டும். இதில் ஒரு கோழி முட்டை போட வேண்டும். முட்டை மூழ்கி விடும். பின்பு சாதாரண சமையல் உப்பை சிறிது, சிறிதாக போட்டு கரைக்க வேண்டும். உப்பு கரைந்து நீரின் அடர்த்தி அதிகமாவதால் முட்டை மிதந்து மேலே வரும். முட்டையின் மேல் பகுதி 25 பைசா அளவுக்கு வெளியே தெரியும் போது நீரில் உப்பு போடுவதை நிறுத்தி விட வேண்டும். இப்போது உள்ள தண்ணீரின் அடர்த்தி நெல்லை தரம் பிரிக்க ஏற்றதாக உள்ளது. இந்த உப்புக்கரைசலில் முதலில் 10 கிலோ நெல் விதையை சிறிது, சிறிதாக போட வேண்டும். அப்போது எடை குறைந்த நெல் விதைகள் மிதக்கும். எடை அதிகமான நெல் விதைகள் கரைசலில் மூழ்கி விடும். மிதக்கும் விதைகளை முற்றிலும் நீக்கி விட வேண்டும். மூழ்கிய விதைகளையே விதைப்பிற்கு பயன்படுத்த வேண்டும். மூழ்கிய விதைகளை வெளியே எடுத்து மூன்று முறை நீரில் கழுவி விதைமேல் படர்ந்த உப்பை நீக்கி விட வேண்டும். இம்முறையில் நெல் விதைகளை தரம் பிரிக்கலாம் என விளக்கினார். இளநிலை ஆராய்ச்சியாளர்கள் சத்தியமூர்த்தி, அசோக்பிரகாஷ் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**தொடர் மழை: விவசாயம் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 30,2011,22:45 IST

தேவாரம் : தேவாரம் பகுதியில் பெய்யும் தொடர் மழையால் விவசாய பணிகள் பாதிப்படைந்துள்ளன. தேவாரம் பகுதியில் கடந்த ஒரு வாரமாக தொடர் மழை பெய்து வருகிறது. பலத்த மழை பெய்வதால் காய்கறி செடிகள் முறிந்து, பூ, பிஞ்சுகள் உதிர்ந்து விடுகின்றன. கோம்பையில் மலையடிவாரத்தில் பயிரிடப்பட்டுள்ள காட்டு தக்காளி செடிகள் சேதமடைந்துள்ளன. பழம் எடுப்பு பருவத்தில் உள்ள செடிகள் பாதிப்படைந்துள்ளதால் பலனை எடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. நிலத்தில் அதிக ஈரப்பதமிருப்பதால் களை எடுப்பது, பழம் பறிப்பது, காய்கறி பறிப்பது போன்ற பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. தென்னை மரங்கள்

மழையில் நனைந்து ஈரப்பதமாக இருப்பதால் காய்களை பறிப்பு பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயப்பணிகள் தடை பட்டுள்ளதால், விவசாய கூலிகள் வேலையின்றி முடங்கியுள்ளனர்.

**தோட்டக்கலைத் துறையில் பயனாளிகள் தேர்வு தீவிரம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 30,2011,22:45 IST

தேனி : தோட்டக்கலைத்துறை மானிய திட்டங்களுக்கு பயனாளிகள் தேர்வு நடந்து வருகிறது. கடமலைக்குண்டு தோட்டக்கலை உதவி இயக்குனர் செந்தில்குமார் கூறியதாவது: விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசன திட்டத்தின் கீழ் 65 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. துல்லிய பண்ணை திட்டத்தின் கீழ் எக்டேருக்கு 70 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. இதில் 40 ஆயிரம் ரூபாய்க்கு சொட்டுநீர் பாசன கருவிகளுக்கும், 30 ஆயிரம் ரூபாய்க்கு உரம், பூச்சி மருந்து, விதைகளும் வழங்கப்டுகிறது. காய்கறிகள், பழங்கள் பயிரிடுவோரும் துல்லிய பண்ணை திட்டத்தின் கீழ் பலன் பெறலாம். தென்னையில் கோகோ ஊடுபயிராக சாகுபடி செய்யும் விவசாயிகளும் இந்த மானிய திட்டத்தில் பயன் பெறலாம். தற்போது தகுதி உள்ள விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகங்களில் விண்ணப்பித்து அரசு சலுகைகளை பெறலாம்,என்றார்.

**பெரியாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 30,2011,22:38 IST

கூடலூர் : பெரியாறு அணை நீர்பிடிப்பில் பெய்து வரும் கன மழையால் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்ந்தது. சில தினங்களாக பெரியாறு அணை நீர்பிடிப்பில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. அணைக்கு நீர்வரத்து அதிகரித்து 4,386 கன அடியாக இருந்தது. நேற்று முன்தினம் 120 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்ந்து நேற்று மாலை நிலவரப்படி 122 அடியாக இருந்தது. தமிழகப்பகுதிக்கு 1192 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீர் இருப்பு 2,984 மில்லியன் கன அடியாகும். தொடர்ந்து நீர்பிடிப்பில் மழை பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்புள்ளது. வைகை அணையின் நீர்மட்டம் 61.35 அடியாக இருந்தது. நீர்வரத்து 3,493 கன அடியாகவும், நீர்திறப்பு 1060 கன அடியாகவும் இருந்தது. நீர் இருப்பு 3,367 மில்லியன் கன அடியாகும். மழையளவு (மி.மீ.,): பெரியாறு 41.3, தேக்கடி 62, கூடலூர் 35, சண்முகாநதி 40, உத்தமபாளையம் 60, வீரபாண்டி 30, வைகை அணை 44, மஞ்சளாறு 42, சோத்துப்பாறை 36.

**உரவிலை உயர்வால் நெல் விவசாயிகள்...தவிப்பு : மழை பெய்தும் தண்ணீருக்கு தட்டுப்பாடு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 30,2011,22:45 IST

வத்திராயிருப்பு : உரவிலை உயர்வு ஒருபுறமும், தண்ணீர் தட்டுப்பாடு மறுபுறமும் என பிரச்னைகள் சூழ்ந்து நிற்பதால், நெல் விவசாயிகள் பெரும் தவிப்பிற்கு ஆளாகியுள்ளனர். மாவட்டத்தின் மேற்குப்பகுதியான வத்திராயிருப்பு, ஸ்ரீவில்லிப்புத்தூர், ராஜபாளையம், சேத்தூர், தளவாய்புரம் பகுதிகளில் நெல் விவசாயம் அமோகமாக நடந்து வருகிறது. இங்கு விளையும் நெல் மாவட்டத்தின் தேவையை முழுமையாக பூர்த்தி செய்வதுடன் ,தமிழகம் முழுவதும் விற்பனைக்கு செல்கிறது. நல்ல முறையில் நடந்து வந்த விவசாயம், தற்போது உரம், தண்ணீர் தட்டுப்பாடு என ஒவ்வொரு ஆண்டும் குறைந்து வருவதால், சாகுபடி பரப்பளவும் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறது. இந்த ஆண்டு காலநடவு பணிகள் மழை துவங்கியதை தொடர்ந்து, அக். முதல் வாரத்திலே துவங்கியது. ஆனால் உரம் , பூச்சி மருந்து விலை உயர்வால் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர். இந்நிலையில், தற்போது மழையும் அதிகமாக பெய்யாமல், நாள்முழுவதும் சாரலாக பெய்கிறது. இதனால் கண்மாய், அணைகள் நீர்வரத்து இன்றி வறண்ட நிலையிலே உள்ளது. இது, விவசாயிகளை மேலும் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

**நாட்டின் தேயிலை இறக்குமதி 23 % சரிவு**

அக்டோபர் 30,2011,16:32

---



புதுடில்லி : நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையிலான கால அளவில் இந்தியாவின் தேயிலை இறக்குமதி 23 சதவீதம் குறைந்துள்ளது. இந்த மாத அளவில் 6.40 மீல்லியன் கிலோ தேயிலை மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டின் இதே மாத அளவில் இந்தியா 8.32 மில்லியன் கிலோ தேயிலை இறக்குமதி செய்துள்ளதாக இந்திய தேயிலை கழக புள்ளிவிபர அறிக்கை தெரிவித்துள்ளது. உலகின் மிக பெரிய தேயிலை இறக்குமதி நாடான இந்தியாவின்

தேயிலை இறக்குமதி, தற்போது தேயிலை ஏற்றுமதியை விட மிகக் குறைந்துள்ளது. 2011-2012ம் நிதியாண்டின் முதல் 5 மாதங்களில் பெரும்பாலான நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டும் தேயிலையின் அளவு பெருமளவு குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக கென்யா, மல்லாவி, நேபாள், ஈரான், இலங்கை, சீனா, இந்தோனேஷியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து இந்தியா தேயிலை இறக்குமதி செய்து வருகிறது. நடப்பு ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் இந்தியாவின் தேயிலை இறக்குமதி 29 சதவீதம் சரிந்து 1.21 மில்லியன் கிலோவாக உள்ளது. இதே போன்று ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையிலான மாதங்களிலும் இந்தியாவின் தேயிலை இறக்குமதி 20 சதவீதம் சரிந்து 10.64 மில்லியன் கிலோவாக இருந்துள்ளது.

**இந்தியாவிலிருந்து 5 லட்சம் டன் அரிசி இறக்குமதி செய்ய இந்தோனேஷியா முயற்சி**

அக்டோபர் 30,2011,15:33



புதுடில்லி : உள்நாட்டு தேவை காரணமாக இந்தியாவிலிருந்து குறைந்த விலையிலான பாஸ்மதி அல்லாத 5 லட்சம் டன் அரிசியை இறக்குமதி செய்ய இந்தோனேஷிய அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது. இந்தியா மட்டுமின்றி வியட்நாம் மற்றும் தாய்லாந்து நாடுகளிடமும் 5 லட்சம் டன் அரிசி இறக்குமதி செய்ய இந்தோனேஷியா கோரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து இந்திய உணவுத்துறை அமைச்சர் வி.கே.தாமசிடம் இந்தோனேஷிய அரசு பேச்சுவார்த்தை நடத்தி உள்ளது. கிலோவுக்கு ரூ.20.45 நிர்ணயம் செய்து இந்தோனேஷியாவிற்கு அரிசி ஏற்றுமதி செய்வது குறித்து அரசு பரிசீலனை செய்து வருவதாக அமைச்சரக தகவல்கள் தெரிவித்துள்ளன. தாய்லாந்தில் ஏற்பட்டுள்ள வெள்ள பெருக்கு காரணமாக அரிசி உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்தியாவிடம் கூடுதலாக அரிசி இறக்குமதி கோர இந்தோனேஷியா தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ளத்தால் உற்பத்தி பாதிப்பு நாட்டின் பருத்தி ஏற்றுமதி அதிகரிக்க வாய்ப்பு

அக்டோபர் 30,2011,01:47



புதுடில்லி:பாகிஸ்தானில் கடந்த ஆண்டு ஏற்பட்ட கடும் வெள்ளத்தால், பருத்தி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், இந்நாட்டிற்கான இந்தியாவின் பருத்தி ஏற்றுமதி நடப்பு நிதியாண்டில் அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மதிப்பீடு: உலகளவில், பருத்தி உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. நாட்டின் மொத்த பருத்தி ஏற்றுமதியில், சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பங்களிப்பு 80 சதவீதமாக உள்ளது. சென்ற ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில், பாகிஸ்தானில் கடுமையான வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டது. இதனால், அதிக அளவில் பருத்தி உற்பத்தியாகும் சிந்து மாகாணத்தில், பருத்தி பயிர்கள் நாசமாயின. இதையொட்டி, நடப்பு 2011-12ம் நிதியாண்டில், பருத்தி உற்பத்தி 6 சதவீதம் குறைந்து, 1கோடியே 22 லட்சம் பொதிகளாக (ஒரு பொதி - 170 கிலோ) இருக்கும் என பாகிஸ்தான் மதிப்பிட்டுள்ளது. இது, அதன் முந்தைய மதிப்பீட்டை விட குறைவாகும். பாகிஸ்தானில் உள்ள நூற்பாலைகளில் பருத்தி கையிருப்பு குறைந்துள் ளது. இதை அதிகரித்துக் கொள்ளும்நோக்கில், இந்தியாவில் இருந்து அதிக அளவிற்கு பருத்தி இறக்குமதி செய்து கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இதேபோன்று சீனாவும்,இந்தியாவில் இருந்து பருத்தியை அதிக அளவிற்கு இறக்குமதி செய்யும் என்று மதிப்பிடப் பட் டுள்ளது.இதனால், இந்தியாவின் பருத்தி ஏற்றுமதி, நடப்பு 2011-12ம் நிதியாண்டில், அதிகரிக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இந்தியா, சென்ற 2010-11ம் நிதியாண்டில்,3.25கோடி பருத்தி பொதிகளை உற்பத்தி செய்தது. இதில், 68 லட்சம் பருத்தி பொதிகள் ஏற்றுமதி செய்யப் பட்டன. இது, முந்தைய நிதியாண்டில், முறையே 2கோடியே 50 லட்சம் மற்றும் 83 லட்சம் பொதிகள் என்ற அளவில் இருந்தது. பரப்பளவு: நாட்டில் பருத்தி பயிரிடும் பரப்பளவும் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளது. நடப்பாண்டு பருத்தி பயிரிடும்பரப்பளவு 9 சதவீதம் அதிகரித்து,1.2கோடி எக்டேராக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பரவலான பருவ

மழையால், நாட்டின் பருத்தி உற்பத்தி, 3.55கோடி பொதிகள் என்ற புதிய சாதனை அளவை எட்டும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. பருத்தி உற்பத்தி அதிகரித்து வருவதால், அதன் விலை உள்நாட்டில் குறைந்துள்ளது.மேலும், சர்வதேச சந்தையில் பருத்தி இருப்பு அதிகம் உள்ளதாலும்,மேலை நாடுகளின் பொருளாதார நெருக்கடி காரணமாகவும், பருத்திக்கானதேவை குறைந்துள்ளது.

தடைநீக்கம்: சென்ற ஏப்ரல் மாதம், உள்நாட்டில் ஒருகேண்டி பருத்தி (356 கிலோ) 61 ஆயிரத்து 500 ரூபாயாக இருந்தது. இது, தற்போது 39 ஆயிரம் ரூபாய்என்ற அளவில் குறைந்துள்ளது.மத்திய அர", சென்ற ஜூலை மாதம் வரை பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதித்திருந்தது. இதனால்,சென்ற நிதியாண்டில்,நாட்டின் பருத்தி ஏற்றுமதி, முந்தை ஆண்டை விட18 சதவீதம் சரிவடைந்தது.சென்ற செப்டம்பர் மாதம், தடையற்ற பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கப்பட்டது.இது, பருத்தி ஏற்றுமதியாளர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எனினும், சர்வதேச சந்தையில், பருத்தி விலை வீழ்ச்சி கண்டுள்ளதால்,ஏற்றுமதியாளர்களின் லாப வரம்பு குறைந்துள்ளது. அதே சமயம், ரூபாய்க்கு எதிரான டாலர் மதிப்பு உயர்ந்துள்ளது, ஏற்றுமதி யாளர்களுக்கு சாதகமான அம்சம் எனலாம். சர்வதேச உற்பத்தி: உலக பருத்தி ஆலோசனைக் கழகம்,இவ்வாண்டு தொடக்கத்தில் வெளியிட்ட முன்கூட்டிய மதிப்பீட்டில், 2011-12ம் நிதியாண்டில், சர்வதேச பருத்தி உற்பத்தி 2.69கோடி டன்னாகவும்,பருத்தி நுகர்வு 2.47கோடி டன் என்ற அளவிலும் இருக்கும் என்று மதிப் பிட்டிருந்தது.

பாகிஸ்தானில் வெள்ளம் காரணமாக பருத்தி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அமெரிக்காவில் வறட்சி காரணமாக இதன் உற்பத்தி குறைந்துள்ளது.அமெரிக்காவின் டெக் சாஸ் மாகாணம்,பருத்தி உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது. இம்மாகாணத்தில்,கடும் வறட்சி காரணமாக, பருத்தி உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.இதன் காரணமாகவும், சர்வதேச சந்தையில் பருத்தியின்தேவை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது, இந்திய பருத்தி ஏற்றுமதியாளர்களுக்கு மிகச் சிறந்த வாய்ப்பை வழங் கியுள்ளதாக இத்துறை சார்ந்தவர்கள் தெரிவித்தனர்.

தினகரன்

## தூத்துக்குடியில் தொடர் மழையால் உப்பு உற்பத்தி முடக்கம்

பதிவு செய்த நாள் : 10/31/2011 0:10:3



தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக மழை பெய்து வருகிறது. சாலைகளில் வெள்ளநீர் தேங்கியுள்ளது. வேம்பார் முதல் பெரியதாழை வரை மாவட்டத்தில் சுமார் 22 ஆயிரம் ஏக்கர் பரபரப்பளவில் உள்ள உப்பளங்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. இதன் காரணமாக உப்பு உற்பத்தி அடியோடு முடங்கி விட்டது.

இதனால் நேரடியாகவும், மறைமுகமாகவும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். மழை யால் அவுரி இலை ஏற்றுமதி, மீன் பிடித்தல் உள்ளிட்ட பிற தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளன. நேற்று காலை 8 மணி நிலவரப்படி, மாவட்டத்தில் அதிகபட்சமாக மணியாச்சியில் 65 மி.மீட்டரும், குறைந்தபட்சமாக கோவில்பட்டியில் 2 மி.மீட்டரும் மழை பெய்துள்ளது. மாவட்டம் முழுவதும் சராசரியாக 24.7 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *நீலகிரி மாவட்டத்தில் பருவமழை காரணமாக வேகமாக நிரம்பும் அணைகள் மின் உற்பத்தி அதிகரிப்பு*



நீலகிரியில் பெய்து வரும் வடகிழக்கு பருவமழையால் ஊட்டி டைகர்ஹில் அணையின் நீர்மட்டம் உயர்ந்து உள்ளதை படத்தில் காணலாம்.

*ஊட்டி, அக்.31–*

*நீலகிரி மாவட்டத்தில் வட கிழக்கு பருவமழை தீவிரமாக பெய்து வருவதால் அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. இதனால் நீர் மின் உற்பத்தி அதிகரித்து உள் ளது.*

*வட கிழக்கு பருவமழை*

*நீலகிரி மாவட்டத்தில் தென் மேற்கு பருவமழை எதிர் பார்த்த அளவிற்கு பெய்ய வில்லை. மேலும் கூடலூர் மற்றும் பந்தலூர் பகுதிகளை தவிர மற்ற பகுதிகளில் சிறிய அளவிலேயே தென் மேற்கு பருவ மழை பெய்தது. இதனால் அணைகளில் நீர் குறைந்து காணப்பட்டது. தற்போது வடகிழக்கு பருவமழை மாவட்டத்தில் பெய்து வருகிறது. இந்த மழை தொடர்ந்து பலத்த மழையாக பெய்து வருவதால் நீரோடை களில் தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது.*

*சராசரி*

*மேலும் அணைகளின் நீர்மட்டமும் உயர்ந்து உள்ளது. கடந்த 6 நாட்களில் மாவட்டத்தில் சராசரியாக ஆயிரத்து 680 மி.மீ. மழை பதிவாகி உள்ளது. இந்த பலத்த மழையினால் ஊட்டி நகராட்சியின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் டைகர்ல், மார்லிமந்து, அப்பர் தொட்டபெட்டா, கோரி சோலா உள்ளிட்ட அணைகள் நிரம்பி வருகின் றன.*

*இதில் அப்பர் கோடப்பமந்து அணை முழுவதும் நிரம்பி வழிகிறது. வறண்டு காணப் பட்ட கோரிசோலா அணை மற்றும் டைகர்ல் அணை யின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து உள்ளது. இதனால் அடுத்த ஆண்டு குடிநீர் தட்டுப்பாடு ஏற்பாடாது என்று அதிகாரிகள் தெரி வித்தனர்.*

*மின் உற்பத்தி*

நீலகிரி மவாட்டத்தில் தமிழகத்திலேயே அதிகளவாக நீர் மின் உற்பத்தி செய்யப் படுகிறது. கடந்த ஏப்ரல், மே மாதங்களில் அணைகளில் நீர் மட்டம் குறைந்து காணப் பட்டதால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது.

தற்போது பெய்து வரும் பருவமழையினால் அணை களில் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. நீர் மின் உற்பத்திக்கு பயன்படும் முக்கிய அணைகளான முக்குறுத்தி அணையில் 74 அடியும், பைக்காரா அணையில் 77 அடியும், கிளன் மார்கன் அணையில் 135 அடியும், பார்சன்ஸ்வேலி அணையில் 55 அடியும், அவலாஞ்சி அணையில் 165 அடியும், போர்த்தி மந்து அணையில் 111 அடியும், எமரால்டு அணையில் 178 அடியும், அப்பர் பவானி அணையில் 192 அடியும் தண்ணீர் இருப்பு உள்ளது.

கடுங்குளிர்

பெரும்பாலான அணைகள் இன்னும் சில நாட்கள் பருவமழை நீடித்தால் முழு கொள்ளளவையும் எட்டி விடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அணைகள் நிரம்ப தொடங்கி உள்ளதால் மின் உற்பத்தி அதிகரித்து உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

வடகிழக்கு பருவமழை காரணமாக ஊட்டியில் தொடர்ந்து கடுங்குளிர் நிலவி வருகிறது. இதனால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது. இந்த கடுங்குளிரையும் பொருட் படுத்தாமல் சுற்றுலா பயணிகள் ஊட்டியில் குவிந்து உள்ளனர்.

அணைகளும் நிரம்பி வருவதால் விவசாயிகள் உற்சாகம் அடைந்து காய்கறி களை பயிரிடும் பணியில் ஈடுபட்டு உள்ளனர். காலை மற்றும் மாலை நேரங்களில் கடுங்குளிரை சமாளிக்க தொழிலாளர்கள் நெருப்பை மூட்டி குளிர் காய்கின்றனர்.